DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.சசிக்குமார் | Father/Husband Name : பால்ராஜ் |
| Age : 41 | Village : கோவில்பட்டி |
| Taluk : | Calling : காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24 Feb 2026 15:39

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் தற்போது திருநெல்வேலி தாலுகா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

2. கடந்த 22.02.2017 ம் தேதி சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, அதே காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வம், தலைமை காவலர் கிருஷ்ணசாமி ஆகியோர் சாத்தூர் மேலகாந்தி நகரில் மணல் திருட்டு சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்தபோது மதியம் சுமார் 03.00 மணியளவில் நகராட்சி பூங்காவிற்கு அருகே வந்த TN 58 S 5225 என்ற பதிவெண் கொண்ட டாடாஏஸ் வாகனத்தினை (வாகனத்தின் புகைப்படம் – அ.சா.ஆ.2) ஓட்டி வந்த நபர் சங்கர் மற்றும் உடனிருந்த வெள்ளைச்சாமி ஆகியோர்களை விசாரணை செய்ய மேற்படி நபர்கள் மேற்படி வாகனத்தில் எவ்வித அரசு அனுமதியுமின்றி 45 சாக்கு மூடைகளில் மணல் இருந்தது.

3. மேலும் அவர்களை விசாரணை செய்ய பொன்மாரி என்பவர் கூறியதன் பேரில் சக்திமாரியம்மன் கோவிலுக்கு ஆற்று மணலை அள்ளி அவர் சொல்லும் இடங்களில் விற்பனை செய்வதாக கூறினார். எனவே மேற்படி இரண்டு நபர்களையும் மதியம் 03.15 மணிக்கு கைது செய்தும், சொத்துக்களை அ.சா.ஆ.1 – அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியும், தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் போலீஸ் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, 16.30 மணிக்கு கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் சொத்துக்களுடம் நிலையம் வந்து அத்தாட்சியில் கண்ட விவரங்களுக்கு நிலைய குற்ற எண் 108/2017 பிரிவு 379 இ.த.ச மற்றும் 21(1) Mines and Minerals Act ன் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வக்குமார் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **<u>(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)</u>**. பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் சம்பவ இட சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் எதிரிகள் இருவரும் அரசுக்கு இழப்பு ஏற்படும் விதமாக நீர்வள ஆதாரத்திற்கு சேதம் விளைவிக்கும் விதமாக ஆதாயம் கருதி ஆற்று மணலை திருடி வந்த குற்றம் உண்மை என தெரியவந்ததால் மேற்படி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட மணலை வருவாய் கோட்டாட்சியரின் நடவடிக்கைக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட TN 58 S 5225 என்ற பதிவெண் கொண்ட டாடாஏஸ்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.02.24 07:04:06 +0530 *24.02.2026.*

வாகனத்தினை படிவம்–91 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். **(படிவம்–91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. வழக்கின் 3வது எதிரியை கைது செய்ய தேடி வந்த நிலையில் 01.03.2017ம் தேதி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் 26.03.2017ம் தேதியன்று மணல் அள்ளிய இடம் யாருக்கு சொந்தமானது என்பது குறித்த விவரத்திற்கு கிராம நிர்வாக அலுவலருக்கும், கைப்பற்றப்பட்ட ஆற்று மணலின் மதிப்பு கோரி உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை வைப்பாறு வடிநிலபிரிவு எண்.1 ஆகியோர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். கிராம நிர்வாக அலுவலர் மதன்குமார் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மணல் திருடப்பட்ட இடமான படந்தால் கிராமத்திற்கு தெற்கேயுள்ள சக்தி மாரியம்மன் கோவிலுக்கு தெற்கேயுள்ள ஆற்றுபடுகை வைப்பாறு புல எண் 247ல் 27.30.5 ஹெக்டேர் பரப்புள்ள இடத்தில் இருக்கிறது என்றும், அது சாத்தூர் ஆற்றுப்பாசன பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று சான்று வழங்கினார். (**கிராம நிர்வாக அலுவலர் 30.03.2017 ஆம் தேதி வழங்கிய சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

7. உதவி பொறியாளர் ராதகிருஷ்ணன் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மணலின் மதிப்பு ரூ.258 என்று சான்று வழங்கினார். **(உதவி பொறியாளர் 07.04.2017 ஆம் தேதி வழங்கிய சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி இரண்டு சான்றுகளும் கிடைக்கப்பெற்று கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி பொறியாளரின் தனித்தனியாக விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தேன். நான் பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பினை காவல்நிலையத்தில் ஒப்படைத்துவிட்டேன்.

8. எனக்கு பிறகு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் முத்து முனியாண்டி நான் விசாரித்த சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரித்த போது சாட்சிகள் என்னிடம் கூறியது போலவே கூறியதால் அவர்களின் வாக்குமூலங்களை அவர் தனியாக பதிவு செய்யவில்லை. கோட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை செய்யும் சரவணன் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை செய்யும் பொன் மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து, இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மணல் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் 19.01.2018 ம் தேதி ஒப்படைப்பு செய்யப்பட்டது என்பதற்கு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கனிம வள சட்டத்தின் கீழான குற்றத்திற்கு நடவடிக்கை எடுக்க கேட்டு வருவாய் கோட்டாட்சியரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதால், கனிமவள சட்டத்தின் பிரிவை நீக்கி, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379 கீழான குற்றமாக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

9. உதவி ஆய்வாளர் முத்து முனியாண்டி அவருடைய விசாரணையிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379 கீழான குற்றத்திற்கு 07.02.2018 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

10. நாங்கள் வழக்கு சம்பவ தேதியில் எத்தனை மணிக்கு ரோந்து பணியை ஆரம்பித்தோம் என்றால் மதியம் 12 மணிக்கு பிறகு ஆரம்பித்தோம். நாங்கள் 12 மணிக்கு ரோந்து பணியை ஆரம்பித்து எங்கெல்லாம் சென்றுவிட்டு சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் நாங்கள் படந்தால் பகுதியை சுற்றிவிட்டு ரோந்து பணியில் இருந்தபோது வாகனம் மணல் திருடி வருவதாக எங்களுக்கு தகவல் கிடைத்தன் பேரில் நாங்கள் நகராட்சி பூங்கா அருகே சென்றோம். சாத்தூரில் இரண்டு நகராட்சி பூங்காக்கள் இருக்கிறது என்றால் சரியல்ல, ஒரு பூங்கா தான் இருக்கிறது. வெள்ளைக்கரை சாலையில் சட்டமன்ற

உறுப்பினர் அலுவலகம் ஒரு நகராட்சி பூங்கா இருக்கிறது என்றாலும், நான் கூறுவது போல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்பதால் தான் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல.

11. யாருடைய உத்தரவின் பெயரில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் நான் காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரி என்பதால் ரோந்து பணிக்கு செல்ல யாரிடமும் அனுமதி கேட்க வேண்டிய அவசியம் இல்லை, ஆகையால் நாங்களாகவே தான் சென்றோம். நான் சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் பணியாற்றியபோது அதே காவல் நிலையத்தில் பார்த்திபன் மற்றும் சதீஷ்குமார், அய்யனார் ஆகிய உதவி ஆய்வாளர்கள் பணியில் இருந்தார்கள் என்றால் இல்லை. நாங்கள் என்ன வாகனங்களில் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் நாங்கள் மூன்று பேரும் எங்களுடைய தனித்தனி இருசக்கர வாகனத்தில் சென்றோம். நான் சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் எவ்வளவு நாட்கள் பணியாற்றினேன் என்றால் சுமார் 8 மாதங்கள் பணியாற்றியிருப்பேன்.

12. சாத்தூர் நகர் பகுதியிலிருந்து படந்தால் மற்றும் மேலக்காந்தி நகர் ஆகிய இடங்களுக்கு செல்லவேண்டும் என்றால் நான்கு வழிச்சாலையில் வெள்ளைக்கரை சாலை அருகேயுள்ள பாலத்தின் கீழ் வழியாகவும், படந்தால் சந்திப்பு வழியாகவும் தான் செல்ல முடியும் என்றால் சரியல்ல, நிறைய வழிகள் இருக்கிறது. நாங்கள் வாகனத்தை தடுத்து நிறுத்தியதாக கூறப்படும் இடம் அதிகமாக ஆட்கள் நடமாட்டம் இருக்கக்கூடிய பகுதி என்றால் வாகனங்கள் செல்லாத சாலை என்று கூற முடியாது, அது ஒதுக்கப்புறமாக இருப்பதால் அனைத்து வாகனங்களும் அந்த பாதையை பயன்படுத்த மாட்டார்கள். சம்பவ இடத்திற்கு அருகே இருப்பதாக கூறப்படும் பூங்கா சாத்தூர் நகராட்சி பூங்காவா அல்லது சொக்கலிங்கம் பூங்காவா என்றால் நகராட்சி பூங்கா ஆகும்.

13. நான் நகராட்சி பூங்கா என்று கூறும் பூங்காவில் நகராட்சி நீரேற்றும் அமைப்பு இருக்கிறது என்பதாலும், அங்கு எப்பொழுதும் பத்து நபர்கள் வேலை செய்வார்கள் என்பதும் என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அங்கு நகராட்சி நீரேற்றும் அமைப்பு இருக்கிறது, ஆனால் அதைப் பார்ப்பதற்கு ஆள் நடமாட்டம் இருக்கக்கூடிய பகுதி போல் தெரியாது. மேற்படி பூங்கா அருகே சிறு குழந்தைகளுக்கான பால்வாடி இருக்கிறது என்றாலும், பெரிய வாகனங்களை சரி செய்யும் ஒர்க் ஷாப் இருக்கிறது என்றாலும் அந்தப் பகுதியில் ஒர்க் ஷாப் இருக்கிறது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், வாகனத்தை தடுத்து நிறுத்தியதாக கூறும் இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், இந்த வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்பதால் தான் தனி நபர்கள் யார் அதில் சாட்சி கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

14. அத்தாட்சி என்னுடைய கைப்பட எழுதப்பட்டது என்றால் நான் சொல்ல சொல்ல காவலர்களால் எழுதப்பட்டது. அத்தாட்சியை எழுதிய காவலரின் பெயர் என்னவென்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் கூறுவதுபோல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால் தான் ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சியை தயார் செய்யவில்லை என்பதால் தான் அத்தாட்சியில் இரண்டாவது பக்கத்தில் கீழேயிருந்து 8 வது வரியில் தனிநபர்கள் யாரும் அந்த இடத்தில் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் அத்தாட்சியில் யாரும் இல்லை என்று தான் குறிப்பிட்டுள்ளேன், ஆனால் யாரும் முன் வரவில்லை என்பதைத்தான் நான் அவ்வாறு கூறியுள்ளேன். அத்தாட்சியின் முதல் பக்கத்தில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

15. சிறப்பு உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வம் தலைமை காவலர் கிருஷ்ணசாமி ஆகிய இருவரையும் நான் எங்கு வைத்து, எந்த தேதியில், யார் முன்னிலையில் விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.02.24 07:04:22 +0530

*24.02.2026.*

என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த பிறகு, சம்பவ இடத்தில் வைத்து பன்னீர்செல்வம் மற்றும் கிருஷ்ணசாமி ஆகிய இருவரையும் விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய சிறப்பு உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வம் மற்றும் தலைமை காவலர் கிருஷ்ணசாமி ஆகிய இருவரையும் சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றேன் என்றால் நான் அவர்களை அழைத்துச் செல்லவில்லை, நான் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு அவர்கள் எனக்கு பின்னால் வந்தார்கள்.

16. வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் என்னுடன் வந்த காவலரால் தயார் செய்யப்பட்டது. மணல் மூட்டைகள் இருந்ததாக கூறப்படும் சிமெண்ட் சாக்குகள் என்ன நிறம் என்பதையும், அது எந்த நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதையும் அத்தாட்சியில் கூறவில்லை என்றால் அது பலமுறை பயன்படுத்தப்பட்ட சாக்குப்பை என்பதால் அதன் நிறம் மற்றும் நிறுவனத்தின் பெயரை குறிப்பிட்டு கூறமுடியவில்லை. நான் கூறுவது போல் அத்தாட்சியில் மணல் சாக்குமூடைகள் கைப்பற்றப்படவில்லை என்பதால் தான் அது பலமுறை பயன்படுத்தப்பட்ட சாக்குப்பை என்றும், அதன் நிறுவனம் மற்றும் நிறம் கூறமுடியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

17. கைப்பற்றப்பட் வாகனம் மற்றும் மணல் மூடைகளை புகைப்படம் எடுத்து நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வாகனத்தின் பெயர் பலகை மற்றும் கண்ணாடியில் என்ன பெயர் எழுதப்பட்டிருந்தது என்பதை நான் தயார் செய்த அத்தாட்சியில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவதுபோல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்பதால் தான் தலைமை காவலர் கிருஷ்ணசாமி அவருடைய சாட்சியத்தில் அவரை நானும், உதவி ஆய்வாளர் அய்யனார் தான் விசாரித்தார் என்றும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் வாகனத்தினை முறையாக கைப்பற்றவில்லை என்பதால் தான் வாகனத்தின் உரிமையாளர் வாகனத்தினை திரும்ப பெறாமல் வாகனத்தினை நீதிமன்ற பொறுப்பிலேயே வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

18. அத்தாட்சி சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், அது காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் எதிரிகளை அழைத்து அவர்களிடம் அதில் கையொப்பம் வாங்கியுள்ளேன்கள் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் வெளியூரை சேர்ந்த நபர்கள் இருக்கிறார்கள் என்றாலும், இது பொய் வழக்கு என்பதால் அவர்களை சாட்சிகளாக சேர்க்காமல் போலீஸ்காரர்களை சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி பொறியாளர் ஆகிய இருவரையும் 07.04.2017ம் தேதி விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளேன் என்றால் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அவர்களை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்ததில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. இது புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றாலும், காவல்நிலையத்தில் கையிருப்பில் இருந்த மணலை இவ்வழக்கு குற்றத்தில் சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

19. நான் மணல் மூடைகளை உதவி பொறியாளரிடம் மொத்தமாக தட்டி காண்பித்தேனா என்றால் ஒவ்வொரு மூடைகளையும் அவிழ்த்து மணல் இருப்பதை காண்பித்தேன். மணல் எந்த இடத்தில் அள்ளப்பட்டது என்பதை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். நான் பார்வையிட்டதற்கு அந்த இடத்தை பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் எதுவும் தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இது தொடர்பாக என்னிடம் யாரும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 3வது எதிரியின் வீட்டில் மணல் கொட்டப்பட்டுள்ளது என்பதை


S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.02.24 07:04:30 +0530

பார்வையிட்டு அதற்கான பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தோ அல்லது புகைப்படம் எடுத்தோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

20. இது புள்ளவிவரத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றாலும், சொன்ன நாள், நேரம் மற்றும் விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் அத்தாட்சி ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் இருந்த மணலை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகனம் குற்றம் சாட்டப்பட்ட நபர்களிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை இயந்திரத்தனமாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

24 Feb 2026 16:54

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.02.24 07:04:38 +0530

Judicial Magistrate 2, Sattur